**வட மாகான சபை -2011**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 3 தொடக்கம் 6 ஆம் பந்திகள் வரை விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, வட மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பிரித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 2006 திசெம்பர் 22 இல் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை 2007 சனவரி 01 இலிருந்து அமுலாகும் வண்ணம் செயற்படுகிறது. எனினும், பிரித்தல் மற்றும் வடக்கு மாகாண சபையை நிறுவுதல் என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2012 யூலை 31 வரை பிரசுரிக்கப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை 2012 யூலை 31 வரை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

#### (அ) மாகாண சபையின் நிதியக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் நிதியக் கணக்குகள் 2012 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டன.

#### (ஆ) ஆளுநரின் நம்பிக்கை நிதியம்

வடக்கு மாகாண சபைக்கான ஒரு ஆளுநரின் நம்பிக்கை நிதியம் 2007 சனவரி 01 இலிருந்து அமுலாகுமாறு உருவாக்கப்பட்டது. நிதியத்தை உருவாக்குவதற்கான சட்டவாக்கம் மாகாண சபையினால் அனுமதிக்கப்படவில்லை. எனினும், கௌரவ ஆளுநர் தனது சொந்த முயற்சியில் 2007 சனவரி 01 ஆம் திகதிய 01/2007 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஆளுநர் நம்பிக்கை நிதியத்தை உருவாக்கியிருந்தார். ஆளுநர் நம்பிக்கை நிதியம், பொதுமக்கள் நிறுவனங்கள், சங்கங்கள் என்பவற்றிலிருந்து கிடைத்த நன்கொடைகள் அல்லது உதவு தொகைககள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து உருவாக்கப்பட்ட இலாபம் என்பவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் மேற்படி மூலங்களிலிருந்து உதவு தொகை எதுவும் கிடைத்திருக்காததுடன் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆளுநர் நம்பிக்கை நிதியத்தின் நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 02 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(இ) ஏனைய நிதிக் கூற்றுக்கள்**

2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான ஏனைய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | நிதிக் கூற்றுக்களின் வகுதி | சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2012 ஏப்ரல் 30 வரை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட மொத்த நிதிக் கூற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 32 | 32 | - |
| (ஆ) | வருமாணக் கணக்குகள் | 06 | - | 06 |
| (இ) | மாகாண அரச உத்தியோகத்தர்களிற்கான முற் பணக் கணக்குகள் | 32 | 32 | - |
| (ஈ) | வர்த்தக முற்பணக் கணக்கு முயற்சிகள் | 04 | 04 | - |
| | | 74 | 68 | 06 |

## 1.4 மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளினால் ஆண்டு செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

(1) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரி சுற்று நிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபையின் ஆண்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(2) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற 34 உள்ளூராட்சிச் சபைகளின் ஆண்டு செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து மாகாணச் சபையின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

2007 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளிற்கான வடக்கு மாகாண சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இயங்காதமையால் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஒக்தோபரில் 06 வரை சபையின் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2007 இலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் தொடர்பான விடயங்களைத் திருத்துவதற்கு மாகாண சபையால் பொறி முறை எதுவும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இலங்கை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | நிதிக் கூற்றுக்களின் விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி தொகை | ஒதுக்கீட்டுக் கணக்குகளின் படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வைப்புக் கணக்குகள் | 570,579,237 | 570,600,237 | 21,000 |
| (ii) | மாகாண அரச உத்தியோகத்தர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவு | 254,199,626 | 224,539,347 | 29,660,079 |
| (iii) | அரச உத்தியோகத்தர்களிடமிருந்தான கடன்கள் மற்றும் முற்பணங்களின் அறவீடு | 216,686,327 | 262,052,847 | 45,366,520 |

**(ஆ) கணக்குகளில் குறைத்துக் கூறலும் அதிகரித்துக் கூறலும்**

(i) கால்நடைப்பண்னை விவசாயப் பண்னை மற்றும் இயந்திர வேலைத்தளம் என்பவற்றின் முற்பணக் கணக்கு முயற்சிகளிலுள்ள ரூபா 8,904,667 தொகையான செலவு மீதிகள் நாட்குறிப்பு பதிவுகளூடாக மாகாண நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. அதன் விளைவாக, மாகாண நிதியக் கணக்கு ரூபா 8,904,667 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(ii) மாகாண சபையின் பல்வேறு மூலங்களிலிருந்தான வருமான நிலுவைகள் உறுதிப்படுத்தப்பட்டு மாகாண நிதியக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஒதுக்கீட்டுக் கணக்குகளில் பொதுவான குறைபாடுகள்**

---

முற்றாக அல்லது பகுதியளவில் நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தாமை, ஆண்டு மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடின்றி செலவினம் செய்யப்பட்டமை, தவிர்க்கப்பட்டமை கணக்குகளில் நிலுவையான பொறுப்புக்கள் தவிர்க்கப்பட்டமை, மீண்டுவரும் செலவு மூலதனம் செலவாகவும் எதிர்மாறாகவும் தாக்கல் செய்யப்பட்டமை, மூலதனச் செலவினங்களிற்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை, சேமிப்புக்களிற்குப் போதிய விளக்கங்களின்மை மற்றும் திணைக்களப் பதிவேடுகளை மாகாணத் திறைசேரிப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யாமை போன்றவாறான மீண்டும் மீண்டும் ஏற்படும் பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிற்காக குறித்த சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

முறையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை காரணமாக ஒழுங்கீனங்கள் தொடர்ந்தும் அதிகரித்தமையால் முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளிலுள்ள பொதுவான குறைபாடுகள் பற்றி பிரதம செயலாளரால் அந்த நடவடிக்கைகள் இவை தொடர்பில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த குறைபாடுகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்கான மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வில் பின்வரும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கல்கள், எரிபொருள், மின்சாரம் முதலியன தொடர்பான ரூபா 16,597,536 தொகையான பொறுப்புகளிற்கு சுதந்திரமான உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 22 அமைச்சுக்கள் மற்றம் திணைக்களங்கள் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 198,781,457 கூட்டு மொத்த தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் மாகாண நிதி விதி (மா.நி.வி) 46 இன் பிரகாரம் அனுமதிகள் மேலதிக செலவினம் செய்யப்பட்ட பின்னர் பெறப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பான ரூபா 59,689,555 ஆன தீர்க்கப்படாத நட்டங்கள் தொடர்ந்து வந்த ஆண்டிற்கு முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 28 செலவினத் தலைப்புக்களின் கீழ் 113 செலவின விடயங்கள் தொடர்பாக புதிய செலவின விடயங்களை உருவாக்காமல் ரூபா 673,784,106 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(உ) 61 தொடக்கம் 74 வரையான மாகாண நிதி விதிகளின் பிரகாரம் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தால் ரூபா 19,340,000 கூட்டுமொத்த நட்டங்களிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அது 2011 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை

(அ) மீளாய்வாண்டிற்கான ஆண்டு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட 28 செலவினத் தலைப்புக்களின் கீழ் 190 செலவின விடயங்கள் தொடர்பான ரூபா 1,243,674,200 ஆன முழு நிதி ஏற்பாடும் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 18 செலவின விடயங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 24,176,817 தொகையான குறை நிரப்பு ஏற்பாடு குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 நிதி ஏற்பாடுகளின்றி செய்யப்பட்ட செலவினம்

16 திணைக்களங்களால் நிதி ஏற்பாடுகளின்றி ரூபா 146,332,726 கூட்டுமொத்தத் தொகையான மூலதன செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் இந்தச் செலவினம் ஆண்டு முடிவில் மிகை அறவிட்டு கணக்குகளிருந்து சீராக்கப்பட்டது.

## 2.6 பிழையான வகைப்படுத்தல்கள்

இரத்மலான, சுற்றுலா விடுதியின் மூலதன முன்னேற்றம் தொடர்பாக மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தால் செய்யப்பட்ட ரூபா 12,550,825 தொகையான மூலதனச் செலவினம் தவறாக மீண்டுவரும் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. இந்தச் செலவினம் மாகாண பொது நிருவாகத்துடன் தொடர்பானதே தவிர கட்டிடங்கள் திணைக்களத்திற்காகதல்ல.

## 2.7 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகளில் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து ஏனைய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மாற்றப்பட்டவர்களும்

இளைப்பாறிய, செயற்திட்டங்களிற்கு விடுவிக்கப்பட்ட, பதவியிலிருந்து விலகிய மற்றும் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்தும் வர வேண்டிய ரூபா 7,033,801 கூட்டு மொத்தத் தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ரூபா 1,428,753 தொகையான இனங்காணப்படாத மீதிகளுடன் கணக்கினக்கக் கூற்றுக்களைத் தயாரித்திருந்தது.

(இ) தீர்க்கப்படாத கடன்கள் தொடர்பாக 05 அமைச்சுக்கள் மற்றும் 27 திணைக்களங்களிலிருந்து கிடைக்க வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 524,028,312 ஆன வரவு மீதி சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் முறையான கணக்கு பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையியால் உண்மையான தேறக் கூடிய தொகையைப் பிரதிபலிக்கிறதா என்று கணக்காய்வில் உறுதிப்படுத்த இயலாதிருந்தது.

(ஈ) நான்கு ஆண்டுகளிற்கு மேலாக பல்வேறு வகையான பதவியினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,928,472 தொகையான நிலுவையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 நிலுவையாகவிருக்கின்ற கட்டுநிதி மீதிகளின் தீர்ப்பனவு

இரண்டு மாகாணத் திணைக்களங்களினால் ரூபா 639,411 கூட்டு மொத்தத் தொகையான கட்டு நிதிமீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாதவையாக இருந்தன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிலுவையான கட்டு நிதி மீதிகள் முறையே 2012 பெப்ரவரி 29 மற்றும் 2012 யூன் 20 இல் தீர்க்கப்பட்டதாக பிரதம செயலாளர் அறிவித்திருந்தார்.

## 2.9 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகளிலுள்ள குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்படும் வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கால்நடைப் பண்ணைகள் பராமரிப்பு – விடய இல. 43202

(i) பூந்தோட்டம் செக்கடிப்புலவு மற்றும் அச்சுவேலி என்பவற்றிலுள்ள கால் நடைப் பண்ணைகளின் நிலையான சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) வட மாகாண சபையின் வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்கான ஆளணி மாகாண ஆளணி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டும் நிச்சயிக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாகாண நிதி விதி 18.3 இன் பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கையின் தொழிற்பாட்டில் எதிர்பார்க்கப்பட்ட நட்டங்களிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மாகாண நிதி விதி 18.4 இன் பிரகாரம் நட்டங்களிற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(v) பிரதேச கால் நடைப் பண்ணை வவுனியா**

மீளாய்வாண்டில் பொரிப்பதற்காக அடைகாக்கும் இயந்திரத்தில் வைக்கப்பட்ட 174,173 முட்டைகளில் உள்ளீட்டின் 72% ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் 125,140 முட்டைகள் மாத்திரம் பொரிக்கப்பட்டிருந்தன. அதன் படி முட்டைகளில் 28 சதவீதம் பழுதடைந்திருந்தன.

**(vi) பிரதேச கால் நடைப் பண்ணை, அச்சு வேலி**

மீளாய்வாண்டில் குஞ்சு பொரிப்பதற்காக அடைகாக்கும் இயந்திரத்தில் வைக்கப்பட்ட 52,916 முட்டைகளில் உள்ளீட்டின் 69% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் 36,684 முட்டைகள் மாத்திரமே பொரிக்கப்பட்டிருந்தன. அதன்படி 31 சதவீதமான முட்டைகள் பழுதடைந்திருந்தன.

**(ஆ) புடவைக் கைத்தொழில் - விடய இல 47302**

(i) மீளாய்வாண்டிற்கான ரூபா 2,586,162 பெறுமதியான இறுதி இருப்புக்களை கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் எது குறைவோ அதில் காட்டப்படுவதற்கு பதிலாக விற்பனைப் பெறுமதியில்

வெளிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒவ்வொரு நிலையத்தினதும் செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு நிலையத்திற்குமான புறம்பான இலாப நட்டக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சாயமூட்டும் விடயங்களின் கொள்வனவு மற்றும் அவற்றை நெசவு நிலையங்களிற்கிடையில் விநியோகித்தமை தொடர்பான முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) கைத்தறி நிலையங்களிற்கு மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நூற்பந்துகளின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டுக் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மத்திய அரசாங்கத்தில் இருந்து கிடைத்த நூற்பந்துகள் மற்றும் நெசவு நிலையங்களிற்கிடையில் அவற்கை விநியோகித்தமை தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) இயந்திர வேலைத்தள அலகு – விடய இல 46,202**

(i) ஒவ்வொரு நிலையத்தினதும் செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு இயந்திர நிலையத்திற்குமான புறம்பான இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான அறவிடப்படாதிருந்த ரூபா 4,504,900 கூட்டு மொத்த கடன்பட்டோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டிற்கான ரூபா 5,684,215 கூட்டு மொத்தத் தொகையான தேறிய இலாபம் மா.நி.வி 281(2) இற்கு முரணாக மூலதன உதவு தொகை கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

(iv) பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகளின்மையால் முற்பணக் கணக்குகளின் முயற்சிகளின் சொத்துக்களின் உண்மையான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகள் பிரதிபலிக்கின்றனவா என்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட

சொத்துக்களின் பெறுமதியை கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(v) ரூபா 150,816,164 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான பெறுமானத் தேய்வு ஏற்பாடு மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.10 வருமானக் கணக்குகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) ஆண்டு நிதிக் கூற்றுக்களில் ஆறு எண்ணிக்கையான வருமானத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க விடுதிகளிற்கான வாடகை, முற்பணக் கணக்குகள் மீதான வட்டி, வாகன உத்தரவு பத்திரக் கட்டணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வைகள் போன்றவாறான வருமானங்களான ரூபா 1,312,766,180 தொகை மாகாண சபையால் சட்டவாக்கங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கானமையால் சபையின் மாகாண நிதியத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 வங்கிக் கணக்கினக்கக் கூற்றுக்கள்

குறிப்பிட்ட சில மாகாண சபை நிறுவனங்களின் வங்கிக் கணக்கினக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சீராக்கங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிகளில் விசாரனைகள் மேற்கொள்வதன் மூலம் 6 மாதங்களிற்கு மேற்பட்ட ரூபா 20,000 தொகையான தேறாத வைப்புக்களில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மா.நி.வி 237 இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் ஆறுமாதங்களிற்கு மேல் கொடுப்பனவுகளிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 17,208,609 பெறுமதியான 180 எண்ணிக்கையான காசோலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் திணைக்களங்களில் ஒரு வங்கிக் கணக்கு தொடர்பாக ரூபா 10,595 மற்றும் ரூபா 448,646 தொகையான முறையே இணங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகள் அவதானிக்கப்பட்டன. எனினும், இந்த வரவுகள் மற்றும் செலவுகளை இணங்கண்டு சம்பந்தப்பட்ட கணக்குகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 பொது வைப்புக் கணக்குகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங் கடந்த வைப்புக்களின் பட்டியல் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கணக்குகளில் உள்ள 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 2,811,477 தொகை வைப்பு மீதிகளிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கூடியதான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக உள்ள ரூபா 8,481,261 தொகையான பொது வைப்புக்களின் பெறுமதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முத்திரைத் தீர்வை, உதவு தொகை அளிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியம், கடன் அறவீடுகள், அரச சேவை சேமலாப நிதிய உதவு தொகை மற்றும் தடுத்து வைத்தல் வரி என்றவாறான மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 871,558 தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு அனுப்பப்படாது வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் செலவிடப்படாத மூலதன ஏற்பாடாக வைப்புக் கணக்குகளிற்கு ரூபா 88,515,197 ஆன தொகை மாற்றப்பட்டிருந்த போதிலும் இந்தப் பணம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக முன்னைய ஆண்டின் மூலதனச் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் பிறப்பிக்கப்பட்டுக் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 344,446 பெறுமதியான காசோலை பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ளாது சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரால் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(எ) சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களம் என்பன ரூபா 62,032,964 தொகையான இனங்கானப்படாத மீதிகளுடன் வைப்புக் கணக்குகளைத் தயாரித்திருந்தன.

(ஏ) 5 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 17,329,188 கூட்டு மொத்தத் தொகையான நிதிகள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

(ஐ) மாகாணத் திறைசேரி, மாகாண அமைச்சுக்கள் மற்றும் ஆளுனர் செயலகம் என்பன உள்ளடங்கலாக 15 திணைக்களங்களால் பல்வேறு நோக்கங்களிற்காக பெறப்பட்ட ரூபா 284,225,659 கூட்டு மொத்தத் தொகையான நிதிகள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது 2 ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

(ஒ) உணவு மற்றும் விவாசாய ஸ்தாபனம் உட்பட பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களால் விவசாயிகளிற்காக இலவசமாக நன்கொடையளிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விவசாய அமைச்சினால் சலுகை விலையில் உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் மோட்டார் சைக்கிளின் நலனாளிகளிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 71.4 மில்லியன் தொகையான அறவீடுகள் மாகாண வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**2.13 கணக்காய்விற்கான் சான்றுகளின்மை**

---

(i) 18 மாகாண சபை நிறுவனங்கள் தொடர்பாக கணக்குகளிலுள்ள ரூபா 141,838,732 கூட்டு மொத்தத் தொகையான 246 விடயங்களை பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், தேவைப்பட்டியல்கள், உறுதிப்படுத்தல்கள், பொருட்கள் பெற்றுக் கொண்ட குறிப்புக்கள், பொருட்கள் வழங்கிய குறிப்புக்கள், வேலை பூர்த்தியாக்கற் சான்றிதழ்கள் போன்றவாறான சான்றுகளின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ii) ரூபா 1,058,657 தொகையான நானாவித வைப்புக்களின் மீதி போதிய ஆவணச் சான்றிதழ்களின்றி நாட்குறிப்புப் பதிவுகளூடாக மாகாண நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 2.14 கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பித்தல்

(i) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, பல செயலாளர்களிற்கு யாழ்ப்பாணத்தில் சொந்தமான வீடுகள் உள்ளன. எனினும், மாகாண சபை அந்தச் செயலாளர்களிற்கு வாடகைக்கு வீடுகளை எடுத்து வழங்கியிருந்தது. இது தொடர்பில் அந்த வீடுகளிற்காக மாகாண சபை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வாடகை, மின்சாரம், நீர்ப்பட்டியல்கள் முதலியவற்றின் கொடுப்பனவு விபரங்கள் நி.பி 122 இன் பிரகாரம் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் மாகாண சபைக்குச் சொந்தமான பல வாகனங்கள் விபத்துக்களைச் சந்தித்திருந்த போதிலும் அந்த வாகனங்கள் பற்றிய விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆளணி தேவைப்பாடுகள், ஆட் சேர்ப்புத் திட்டம், வயது எல்லைகள், கல்வித் தகைமைகள் முதலியவற்றைக் கருத்திற் கொள்ளாது மாகாண சபையினால் உள்ளூராட்சி சபைகளிற்கு பல்வேறு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட அந்த நியமணங்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி பற்றிய விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.15 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணங்காமை அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிதி விதிகள்
இலக்கங்கள் :- 47(1), 51, 70, 69, 70(5), 76, 105, 106, 107, 166(3), 172, 220(1), 236(3), 237, 260(iii), 261, 301, 365(1), 367, 368, 403, 407, 415(1), 420(i), (v), (XIII), 433, 434(2), 434(5), 434(6)

(ஆ) 1998 ஓகத்து 14 ஆம் திகதிய 361 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபம்

## 2.16 மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளிற்கு முரணாக தாபன விடயங்களை அமுலாக்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட 1999 யூன் 01 ஆம் திகதிய பீடி/பீபீ/9 ஆம் இலக்க சுற்றுநிருபததின்படி, மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களின் தாபன விடயங்கள் அமுலாக்குதல் அரச வேலையின் நேரொத்த பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களை தொடர்பான நடை முறைகளுடன் இயலக்கூடியளவில் இணங்கியதாக இருக்க வேண்டும். இந்த ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) ஒரு செயலாளருக்கு ரூபா 150,000 (அண்ணளவாக) பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருள்களுடன் முற்றாக தளபாட வசதி கொண்ட வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடுகளில் குடியிருக்கிருக்கின்ற செயலாளர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன் வாடகைக்கு எடுக்கப்பட்டு அவர்கள் குடியிருக்கின்ற அந்த வீடுகளிற்கான மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களின் கொடுப்பனவுகளும் மாகாண நிதிகளிலிருந்தே மேற்கொள்ளப்பட்டிருந்தன. தாபன விதிக் கோவையின் ஓஐஓ ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க விடுதிகளில் குடியிருப்பதற்காக செயலாளர்கள் உட்பட சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் வாடகை அறவிட வேண்டும் என்றதுடன் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்கள் அவர்களால் திர்க்கப்பட வேண்டுமென்ற பொது நிருவாக அமைச்சின் செயலாளரினால் அப்போதைய வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2001 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய கடிதம் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பிரதம செயலாளர் சபை இல்லாமையால் கௌரவ ஆளுனரின் விசேட அனுமதியுடன் மத்திய அரசாங்கம் மற்றும் ஏனைய மாகாண சபைகளின் அதே தரத்திலுள்ளவங்கள் அனுபவிக்கும்

சலுகைகள் மற்றும் வசதிகள் எங்களுடைய செயலாளர்களிற்கும் வழங்கப்பட்டதென உரைத்திருந்தார்.

(ii) முறையான கொள்வனவு நடை முறையைக் கடைப்பிடிக்காது 2011 சனவரியிலிருந்து அலுவலக நோக்கங்களிற்காக மாகாண சபையால் 14 எண்ணிக்கையான கட்டிடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் வாடகையாக ரூபா 7,467,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக வாடகை கொடுப்பனவிற்கான பெறுமதி மதிப்பீடு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பதவியினருக்கு சம்பளங்களாக ரூபா 9,707 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பிரதேச ஆணையாளர்களிற்கான ஆளணி அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும், இளைப்பாறிய இலங்கை நிருவாக சேவையைச் சாராத உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிற்கு பிரதேச ஆணையாளர்களாகக் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக 2011 மே 11 ஆம் திகதிய 9/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்திற்கு முரணாக அவர்களிற்கு வாகனப் பராமரிப்பு, எரிபொருள் மற்றும் ஏனைய அலுவலக பராமரிப்பு செலவினம் என்பவற்றிக்கு மேலாக சம்பளங்களாக ரூபா 1.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 721,712,394 ஆன மிகைக்கெதிராக முன்னைய ஆண்டில் ரூபா 47,201,940 ஆன பற்றாக்குறை ஏற்பட்டிருந்தமையால் வரியற்ற வருமானம் மற்றும் அரசாங்க மானியம் என்பன ரூபா 9,775,312,049 ஆல் அதிகரித்தமை காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா 768,914,334 ஆல் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 3.2 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

**வருமானம்**

| வருமான விடயம் | 2011 பாதீடு | 2011 உண்மையானது | 2011 முரண் | 2010 பாதீடு | 2010 உண்மையானது | 2010 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| வரியுள்ள மற்றும் வரியற்ற வருமானம் | 42 | 1,312.80 | (1270.80) | 35.23 | 155.19 | (119.96) |
| அரசாங்க மானியங்கள் | 11,717.20 | 10,870.70 | 846.50 | 11,757.17 | 11,320.21 | 436.96 |
| | 11,759.20 | 12,183.50 | 424.30 | 11.792.40 | 11,475.40 | 317.00 |

**செலவினம்**

| மீண்டுவரும் செலவினம் | 2011 பாதீடு | 2011 உண்மையானது | 2011 முரண் | 2010 பாதீடு | 2010 உண்மையானது | 2010 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 7,606 | 7,583 | 23 | 6,800.16 | 6783.12 | 17.14 |
| ஏனையவை | 2,162 | 2,124 | 38 | 1,899.84 | 1,893.20 | 6.64 |
| உப மொத்தம் | 9,768 | 9,707 | 61 | 8,700.00 | 8,676.22 | 23.78 |
| மூலதன செலவினம் | 1,949 | 1,754 | 195 | 3,057.17 | 2,846.20 | 210.97 |
| இறுதி மொத்தம் | 11,717 | 11,461 | 256 | 11,757.17 | 11,522.42 | 234.75 |

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 11,461 மில்லியனாக இருந்ததுடன் அதில் 84.6% மீண்டுவருஞ் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதே நேரம் 15.4% மூலதனச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், மொத்தச் செலவினத்தில் ரூபா 7,583 மில்லியன் அல்லது 66 சதவீதம் ஆளுக்குரிய வேதனங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டர்ர் வாகன வருமான அனுமதிப்பத்திரங்களின் கீழான நிலுவை வருமானம் உறுதிப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மாகாண நிதிகளின் பயன்பாடு

மாகாண சபையின் அபிவிருத்தி வேலை பிரேரணைகளிற்காக பல்வேறு மூலங்களிலிருந்து கிடைத்த நிதிகள் மற்றும் அதில் செய்யப்பட்ட உண்மையான செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | விடயங்களின் விபரம் | கிடைத்த நிதிகள் | உண்மையான செலவினம் | சேமிப்புக்கள் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| (i) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள்(பீஎஸ்டீஜீ) | 1,150,000,000 | 1,040,120,034 | 109,879,966 | 90 |
| (ii) | கல்வித்துறை அபிவிருத்தி செயற்திட்டம் (ஈஎஸ்டிபீ) | 80,500,000 | 58,876,300 | 21,623,700 | 73 |
| (iii) | வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம் (என்ஆர்சீபீ) | 700,000,000 | 481,626,472 | 218,373,528 | 69 |
| (iv) | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசேவ்) | 309,000,000 | 305,353,651 | 3,646,349 | 99 |
| (v) | மாகாண வீதி செயற்திட்டம் | 654,000,000 | 234,089,574 | 419,910,426 | 36 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (பிஆர்பீ) | | | | |
| (vi) | பிரமாண அடிப்படை மானியம் (சீபீஜீ) | 344,319,000 | 276,250,000 | 68,069,000 | 80 |
| (vii) | ஏழைகளிற்காதரவான கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம் / ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (யூஎன்எவ்பீஏ) | 45,000,000 | 2,027,680 | 42,972,320 | 04 |
| (viii) | பொருந்தும் மானியம் | 30,000,000 | 27,000,000 | 3,000,000 | 90 |
| (ix) | நவோதய வடக்கு மாகாண சபை | 100,000,000 | - | 100,000,000 | - |
| | | 3,412,819,000 | 2,425,343,711 | 987,475,289 | 71 |

### 3.5 மாகாண நிதிகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2007 சனவரி தொடக்கம் 2011 திசெம்பர் வரை ரூபா 400 மில்லியனிலிருந்து ரூபா 1,775 மில்லியன் வரையான வீச்செல்லையில் வங்கி மீதிகள் தொடர்ந்து அதிகரித்திருந்ததுடன் இந்த விடயம் எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், இந்தப் பணத்தை மாகாணத்திலுள்ள பொது மக்களின் நன்மைக்காகப் பலப்படுத்துவதற்கு 2012 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வரையப்பட்ட ரூபா 15,188,932 பெறுமதியான 217 காசோலைகள் 2012 மார்ச் 31 வரை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்குகளில் பயன்பாடின்றியிருந்தன. இது தொடர்பாக மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் உண்மையான செலவினம் வடக்கு மாகாண சபையின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் (தலைப்பு 315 இன் கீழ்) அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது)

(இ) 2008 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வங்கி, தப்ரபேன் கிளையில் வைக்கப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் தொகையான வங்கி மீதி எதுவித கொடுக்கல் வாங்கல்களிற்கும் பயன்படுத்தப்படாது விடப்பட்டிருந்ததுடன் 4 ஆண்டுகளிற்கு மேலாக பயன்பாடின்றி இருந்தது. இதன் விளைவாக, பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த பணத்திற்கான குறித்த நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

### 3.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஆளணி

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடக்கு மாகாண சபையின் பிரேரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஆளணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**பாடசாலைகள் தவிர்ந்த மாகாண சபையின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்**

| வகுதி | பிரேரிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் (மேலதிகம்) |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| நிறைவேற்றுத் தரங்கள் | 1,173 | 630 | 460 |
| ஆதரவு பதவியினர் மற்றும் சிற்றூழியர் தரங்கள் | 26,047 | 23,851 | 2,196 |
| ஏனையோர் (அமைய/தற்காலிக) | 1,109 | 696 | 413 |
| | 28,329 | 25,177 | 3,069 |

பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச ஆணையாளர்களின் ஆட்சேர்ப்புக்கான ஆளணியை அங்கீகரித்திருக்காத போதிலும் அத்தகைய பதவியணிக்கான நியமனங்கள் வடக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளங்களாக அண்ணளவாக ரூபா 861,540 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6.2 முறையற்ற நியமனங்கள் மற்றும் வேதனங்கள்

மாகாண சபைக்கான அதிகமான நியமனங்கள் எதுவித முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளையும் பின்பற்றாது எழுந்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த சில நியமனங்கள் தீவு முழுவதற்குமான சேவைகள் அல்லது மாகாண அரச சேவைகளிற்கு பொருந்தக் கூடிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அதிகார எல்லைகளிற்கிடையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றுநிருபத்திற்கு முரணாக மீள நியமிக்கப்பட்ட இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக சம்பளத்தின் தகுதியான தொகைக்கு மேலாக ரூபா 3.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நான்கு இலங்கை நிருவாக சேவை சாரத உத்தியோகத்தர்கள் இலங்கை நிருவாக சேவை பதவி வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) அமைச்சரவையின் அங்கீகாரமின்றி சட்ட ஆலோசகர் உட்பட ஒன்பது ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களிற்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான நடைமுறையை பின்பற்றாது சில இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(உ) மாகாண சபையில் சிரேஷ்ட கணக்காளர்கள் இருந்த போதிலும் அதிகமான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கனிஷ்ட கணக்காளர்கள் பிரதம கணக்காளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதன் விளைவாக இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிறந்த நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் நிதி ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகமான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பிரதம முகாமைத்துவ எழுதுனராக முகாமைத்துவ சேவை வகுப்பு 1 இற்கு பதிலாக முகாமைத்துவ சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நியமித்திருந்தனர்.

(எ) அதிகமான முகாமைதுவ உதவி வேலைகள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தன.

(ஏ) இலங்கை கணக்காளர் சேவை தீவடங்கலிற்குமான சேவையாக இருந்த போதிலும் 2007 பெப்ரவரி 11 இல் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பைக் கருத்திற்கொள்ளாது கணக்காளர்களின் கடமைகளை ஆற்றுவதற்கு 25 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 3.7 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் வடக்கு மாகாண சபையின் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் சிலவற்றின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.7.1 ஆளுநர் செயலகம்

(அ) மீளாய்வாண்டில் யாழ்ப்பாணத்தில் ரூபா 61.8 மில்லியன் கிரயத்தில் கௌரவ ஆளுநரின் செயலகத்திற்கான ஒரு அலுவலகக் கட்டிடம் புதிதாக நிருமாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் அலுவலகங்கள் இயங்குவதற்கான வாடகையாக விலை மதிப்புத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளாது ரூபா 1,440,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி, கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக ரூபா 61.8 மில்லியனைச் செலவிடுவதற்கு நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 4 மில்லியன் கிரயத்தில் எல்லைச் சுவர் வாகனத் தரிப்பிடம் கிணறு, பாதுகாப்பு சாவடி நிலக்கீழ்த் தொட்டி மற்றும் நீர் தாங்கி என்பவற்றின் நிருமாணத்திற்கான ஒப்பந்தம் கேள்வி நடைமுறையைப் பின்பற்றாது வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 22 சதவீதத்திலிருந்து 156 சதவீதம் வரை வீச்செல்லைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மதிப்பீட்டின் மூலக் கிரயத்தை விஞ்சிய ரூபா 13.3 மில்லியன் வித்தியாசத்திற்கான கொடுப்பனவு சம்பந்தப்பட்ட அதிகாரங்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) தளபாடங்கள் மற்றும் உபகரணங்களிற்கான மூலக் கிரய மதிப்பீடு ரூபா 3 மில்லியனாக இருந்த போதிலும் முறையான கேள்வி நடைமுறையைப் பின்பற்றாது ரூபா 7 மில்லியனிற்கு விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) வாகனத் தரிப்பிடம், கிணறு பாதுகாப்பு சாவடி, நிலத்தின் கீழ் தொட்டி மற்றும் நீர்த்தாங்கி என்பவற்றின் நிருமாணத்திற்கான அளவீட்டு பட்டியலில் (பீஓகியூ) காட்டப்பட்ட ரூபா 446,000 பெறமதியான 19 எண்ணிக்கையான விடயங்கள் பட்டியலில் ஒப்பந்தக்காரால் கோரப்பட்ட அளவை விஞ்சி தகுந்த காரணங்களின்றி தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அதிகரிக்கப்பட்டிருந்தன.

### 3.7.1.2 ஆளுநர் செயலகத்திற்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு ரூபா 7,006,430

மீளாய்வாண்டில் ஆளுநர் செயலகத்திற்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவிற்காக கட்டிடங்கள் திணைக்களத்தால் ரூபா 7,006,430 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்தக் கொடுக்கல் வாங்கல் ஆளுனர் செயலகத்துடன் தொடர்புபட்டதாக இருந்த போதிலும் கட்டிடங்கள் திணைக்களத்தினூடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கொடுப்பனவு மூல விலைப்பட்டியல்களுடன் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உறுதிச்சீட்டுக்களில் பொருட் பதிவேட்டு சான்றிதழ்களின்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.7.2 மாகாணத் திறைசேரி

2002 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்தின் 01 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக்காக ஆண்டுப் பாதீட்டில் புறம்பான நிதி

ஏற்பாடுகளை மாகாணத் திறைசேரி மேற்கொண்டிருக்கவில்லை. எனவே மாகாண சபை வெளித்தரப்பினருக்கு மாகாண சபையின் பல் வேறு நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியைக் கணக்கிடுவதற்கு இயலாதிருந்தது. இது தொடர்பாக குறிப்பிடப்பட்ட தொகை ஆண்டு மதிப்பீடுகளில் ஏற்பாடுகளின்றி பெறுமதி சேர் வரியாக (வீரரீ) மூலதன ஒதுக்கத்திலிருந்து மாகாண சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.7.3 கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு தொடர்பாக ரூபா 1,412,146 தொகைக்கு 2011 திசெம்பர் 31 இல் வரையப்பட்ட 18 காசோலைகள் 2012 மார்ச் 31 வரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தக் கொள்வனவுகள் 2012 மார்ச் 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.4 மாகாண கல்விப் பணிப்பாளர்

(அ) மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலைகளிற்கிடையில் பாடப்புத்தகங்கள் சீருடைகள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றில் சமச்சீரற்ற விநியோகங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மாகாண நிதிவிதி 219.2 (ii) இற்கு முரணாக பதவி நிலையல்லாத தரங்களுட்பட பல்வேறு உத்தியோகத்தர்களிற்கு ரூபா 128,000 தொடக்க ரூபா 600,000 வீச்செல்லையான உப கட்டு நிதிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) மதிப்பீடுகள் தயாரிக்கப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால் பல்வேறு நோக்கங்களிற்காக பல்வேறு உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்ட முற்பணங்களின் தீர்ப்பனவில் குறிப்பிடத்தக்க காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,634,297 கூட்டுமொத்தமான பின்வரும் செலவினங்களை பங்குபற்றியோரை விட கூடுதலானவொருவருக்கு உயர்ந்த விலைகளில் வழங்கப்பட்ட உண்டி வகைகளின் பெறுமதி சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாக கருதப்படமுடியும்.

| செலவினங்களின் விபரங்கள் | ரூபா |
|---|---|
| சங்கீத நிகழ்ச்சித் திட்டத்திற்கான சிற்றூண்டி | 837,185 |
| தீபாவளி உட்பட விசேட தினங்களிற்காக பரிசுகள் வழங்கல் | 854,250 |

| | |
|---|---|
| கொழும்பில் நடாத்தப்பட்ட கலாசார நிகழ்ச்சி | 139,452 |
| முன்பள்ளிகளிற்கான சிற்றூண்டி செலவுகள் | 421,410 |
| மன்னாரில் நடாத்தப்பட்ட தமிழ் இலக்கிய நிகழ்ச்சிக்கான ஒளி மற்றும் ஒலி முறைமை | 382,000 |
| | --------------- |
| | 2,634,297 |
| | ======== |

(உ) ஆசியா பவுன்டேசனால் நன்கொடையளிக்கப்பட்ட பெறுமதிமிக்க புத்தகங்கள் தேவைப்பட்ட பாடசாலைகளுக்கு அந்தப் புத்தகங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு ஆண்டிற்கு மேலாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**(ஊ) பொருத்தமற்ற முறையில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டமை**

(i) குறித்த பாடங்களிற்காக பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களின்படி, ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக சம்பந்தப்பட்ட பாடங்களிற்கு சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் அந்தப் பாடங்களிற்காக வேறு சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களிருந்ததமை அவதானிக்கப்பட்டது. ஆசிரியர்களை பொருத்தமற்ற முறையில் ஈடுபடுத்தியமை காரணமாக க.பொ.த.ப சா/த மற்றும் உ/.த பரீட்சைகளின் செயலர்றல் எய்தப்பட்டிருக்கவில்லை. ஆசிரியர்களை ஈடுபடுத்தியமை பாடங்களிற்கான வெற்றிடங்களின்படி முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்தால் சிறந்த செயலாற்றலை அடைந்திருக்க முடியும்.

(ii) தர உள்ளிடுகைக்காக பன்னிரண்டு வலயக்கல்வி அலுவலகங்களிலுள்ள 1,016 பாடசாலைகளுக்கு ரூபா 84,750,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், மாகாண கல்வித் திணைக்களத்தினால் தர உள்ளீடுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகள் மீது முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடின்மை காரணமாக ரூபா 3,498,263 ஆன தொகை குறித்த

நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாது பிடித்துவைக்கப்பட்டிருந்தது. மேலும், பாடசாலைகளிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 81,251.737 ஆன நிதிகளில் குறிப்பிடத்தக்களவு பணம் மீளாய்வாண்டில் பல பாடசாலைகளினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

**(எ) கல்வித்துறை அபிவிருத்தி நிதியின் பயன்பாடு**

**(i) கிளிநொச்சி மத்திய கல்லூாயீல் டிஜிரல் நூலகக் கட்டிட நிருமாணம் - ரூபா 2,097,847**

(அ) மேற்படி வேலையின் இறுதிக் கொடுப்பனவுகள் பல வேலைகள் பூர்த்தியாக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கூரை மற்றும் கதவு நிலைகள் என்பன உட்பட அதிகமான வேலைகள் முறையாக செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் 2011 நொவம்பர் 29 இல் டிஜிரல் நூலகத்திற்கு வழங்கப்பட்ட 87 எண்ணிக்கையான தளபாடங்கள் மற்றும் மல்ரிமீடியா புரொஜெக்கரர் என்பன குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) டிஜிரல் நூலகத்திற்கு கணணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை அதன் விளைவாக, நூலகத்திற்கான ரூபா 2,097,847 தொகை பெறுமதியான கட்டிடம் மற்றும் ரூபா 1,254,080 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்களிற்காக எய்தப்பட்டிருக்கவில்லை.

**(ii) யா/காரைநகர் டாக்டர் தியாகராஜா ம.ம.வி இல் டிஜிரல் நூலக நிருமாணம் - ரூபா 2,297,857**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிள்றன.**

(அ) டிஜிரல் நூலகம் 2011 யூலை 20 இல் திறக்கப்பட்டிருந்த போதிலும் நூலகம் 2012 திசெம்பர் 31 வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சார இணைப்பு 2012 ஏப்ரல் 30 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களம் நூலகத்திற்கு உருக்கிலான தளபாடங்களை வழங்குவதற்கே திட்டமிட்டிருந்தது. எனினும், மரத்தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) டிஜிரல் நூலகத்திற்கு கணனிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக ரூபா 2,056,498 தொகை கொண்ட கட்டிடத்தின் பெறுமதி மற்றும் நூலகத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 1,254,080 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் குறித்த நோக்கத்தை அடைந்திருக்கவில்லை.

### 3.7.5 விளையாட்டுத்துறை திணைக்களம்

விளையாட்டுத்துறை திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 447,180 பெறுமதியான விளையாட்டு உடைகள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7.6 கைத்தொழிற் திணைக்களம்

(i) முயற்சி அபிவிருத்தி சேவைக்கான நிலையத்திற்காக ரூபா 5,500,000 ஆன மூலதன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் திணைக்களம் நோக்கங்களின் முன்னேற்றத்தைப் மதிப்பாய்வு செய்வதற்காக ஒரு கண்காணிப்பு முறையை அமுலாக்கியிருக்கவில்லை.

(ii) நுண்பாக கடனிற்காக ரூபா 500,000 ஆன மூலதன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் திணைக்களமானது நுண்பாக கடனின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(iii) கட்டிடம் மற்றும் கட்டமைப்பு நீர்த்தாங்கி மற்றும் வீதிகள் என்பவற்றிற்காக ரூபா 4,500,000 ஆன மூலதன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த நிதி குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7.7 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

(i) வாழ்வாதார கடன் முகாமைத்துவ முறைமைக்கான மாகாண நிலையததிற்காக ரூபா 21.6 மில்லியன் மூலதன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நோக்கங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான கண்காணிப்பு முறைமையை அமுலாக்கியிருக்கவில்லை.

(ii) நுண்பாக கடன் நடவடிகைகளிற்காக ஆண்டு மதிப்பீட்டில் ஏற்பாட்டில்லாது ரூபா 20 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் நுண்பாக கடன்வாடிக்கையாளர்களிற்காக மாகாண நிதியை பயன்படுத்துவதற்கான நிதி ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

### 3.7.8 சுகாதார அமைச்சு

சுகாதார அமைச்சிற்குச் சொந்தமான ஒரு வான் 2010 ஆம் ஆண்டில் விபத்தை அடைந்திருந்ததுடன் வாகனத்தை திருத்துவதற்கு ரூபா 795,000 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. நிதி திட்டமிடல் அமைச்சின் 1994 செப்தெம்பர் 12 ஆம் திகதிய எம்எப்/பீ/வீஈஎச/1 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் அமைச்சு இந்த வாகனத்திற்கு 2010 ஆம் ஆண்டிற்காக காப்புறுதி செய்திருக்கவில்லை. அதன் விளைவாக திருத்தத் செலவுகளின் ஒரு பகுதியை காப்புறுதியில் இருந்து பெறவதற்கான சாத்தியம் மாகாண சபைக்கு மறுக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையிலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும்கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.9 உள்நாட்டு மருத்துவ திணைக்களம்

(i) பொது மக்களிற்கு சேவையாற்றுவதற்காக உள்ளூராட்சி சபைகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட 84 ஆயுள்வேத மருந்தகங்கள் முறையான மேற்பார்வை இன்றியும் போதிய மருந்துகள் வழங்காமையாலும் செயலற்றிருந்தன.

(ii) ஆயுள் வேத மருத்துவத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் மூலிகைத் தோட்டங்களை நிறுவி பராமரித்தல் என்பவற்றிக்காகப் சுகாதார அமைச்சின் கீழ்

உள் நாட்டு மருத்துவ அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டது. எனினும், பெருந்தொகையான பணம் தனியார் வியாபாரிகள் மற்றும் ஆயுர்வேத கூட்டுத்தாபனம் என்பவற்றிலிருந்து மருந்துகள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.7.10 சுகாதாரத் திணைக்களம்

(அ) வைத்தியர்கள் மற்றும் ஆதரவுப் பதவியிணியிரின்மை காரணமாக குறித்த சில வைத்தியசாலை கட்டிடங்கள் மற்றும் வைத்திய உபகரணங்கள் என்பன பயன்பாடின்றியிருந்தன. ஆகையால் இந்தக் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களிற்கும் செய்யப்பட்ட செலவினம் பயனற்றவையாகக் கருதமுடிவதுடன், இந்த செலவினத்தின் நன்மைகள் பொது மக்களிற்கு கிடைத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | பெறத்தக்க மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட ஆளணி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 42 | 30 | 99 |
| முல்லைத்தீவு | 09 | 18 | 55 |
| கிளிநொச்சி | 13 | 22 | 62 |
| மன்னார் | 16 | 44 | 89 |
| வவுனியா | 11 | 108 | 94 |
| | 91 | 222 | 399 |

(ஆ) வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 61 ஆக இருந்தமையால் பற் சிகிச்சை நிலையங்களிற்கான ஆளணியினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டிராத அதே சமயம் பற் சிகிச்சை நிலையத்திற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 27 ஆக மட்டுமே இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பற் சிகிச்சை நிலையங்களின் மருத்துவ அலுவலர் | வைத்தியசாலைகளின் எண்ணிக்கை | பற்சிகிச்சை அறுவை வைத்தியரின் உள்ள எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட ஆளணி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 26 | 18 | 09 |
| முல்லைத்தீவு | 06 | 05 | 03 |
| கிளிநொச்சி | 09 | 05 | 04 |
| மன்னார் | 10 | 08 | 04 |
| வவுனியா | 10 | 10 | 07 |
| | 61 | 46 | 27 |

(இ) மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண ஆர்டிஎச்எஸ் பிரிவுகளில் உள்ள ஒவ்வொரு வைத்திய சாலையிலும் மருத்துவ ஆலோசகர்கள் இருக்க வேண்டும் எனினும் வடமாகாண வைத்திய சாலைகளிற்கு தேவையான 51 மருத்துவ ஆலோசகர்களில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 ஆலோசகர்கள் மட்டுமே இருந்தனர்.

(ஈ) வடக்கு மாகாணத்தில் 1011 பாடசாலைகள் செயற்படுகின்ற போதிலும் வடக்கு மாகாண பாடசாலைகளில் 15 பற்சிகிச்சைப் பிரிவுகள் மட்டுமே செயற்பட்டிருந்தன.

**3.7.10.1 சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வாட்டுக்கள் மற்றும் பதவியினர் விடுதிகளைப் புதுப்பித்தல் வேலைகள் - ரூபா 9,483,051**

(i) ரூபா 795,590 கூட்டுமொத்தத் தொகையான 19 வேலை விடயங்களின் அளவீட்டுப் பட்டியல்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் எவ்வித காரணமின்றி அதிகரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக அளவீட்டுப் பட்டியல் விடயங்களை அதிகரிப்பதற்கு நிதிப் பிரமாணங்களின்படி உரிய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) உரிய அதிகாரங்களிடமிருந்தான அனுமதி பெற்றுக்கொள்ளாது வேலைகளில் மேலதிக அளவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்

விளைவாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,219,370 ஆன மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) ஒப்பந்தக் கொடுப்பனவுகளிற்கான இறுதிப் பட்டியலைப் பரிசோதிக்காது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு**

பின்வரும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் அளவுகள், அளவீடுகள் மற்றும் விடயங்களின் விலை என்பவற்றை அளவீட்டுப் பட்டியலுடன் பரிசோதிக்காது மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | **வேலையின் தன்மை** | **கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா** |
|---|---|---|
| (i) | பண்ணை ஆர்டிஎச்எஸ் இற்கான பிராந்திய பயிற்சி நிலையத்தின் நிருமாணத்திற்கான இறுதிக் கொடுப்பனவு கட்டம் - I | 3,928,972 |
| (ii) | பண்ணை, ஆர்டீஎஸ்எச் இற்கான பிராந்திய பயிற்சி நிலைய நிருமாணத்திற்கான இறுதிக் கொடுப்பனவு கட்டம் - II | 1,422,305 |
| (iii) | பண்னை ஆர்டிஎச்எஸ் இற்கான பிராந்திய பயிற்சி நிலைய நிருமாணத்திற்கான இறுதிக் கொடுப்பனவு கட்டம் - III | 1,531,421 |
| | | 6,882,698 |

**(இ) பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு (வற்) ரூபா 19,715,882**

ரூபா 19,715,882 கூட்டுமொத்தத் தொகையான பெறுமதி சேர் வரி பல்வேறு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழக்குனர்களிற்கு மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் 2006 – கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அந்தக் கொடுப்பனவுகளின் மாதாந்த கூற்று அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பத்திய உணவிற்கான கொடுப்பனவு**

(i) அரை உணவிற்கான கொடுப்பனவு முழு உணவிற்காக செலுத்தப்பட்டிருந்தது. முழு மற்றும் அரை உணவுகளிற்கு ஏற்புடைய விலைகளைப் பகுப்பாய்வு செய்யாது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு விலை வீதங்களை அங்கீகரித்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | கரவெட்டி | | கோண்டாவில் | | அனலைதீவு | | நயினா தீவு | | வேலணை | | மானிப்பாய் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா | முழு உணவு வீதம் ரூபா | அரை உணவு வீதம் ரூபா |
| உடன் மீன் | 98 | 134 | 100 | 150 | 120 | 127 | 75 | 140 | 100 | 135 | 90 | 120 |
| மாட்டிறைச்சி | 98 | 135 | 110 | 150 | 120 | 127 | 75 | 140 | - | - | 90 | 120 |
| கருவாடு | 98 | 135 | 110 | 150 | 120 | 127 | 75 | 140 | 100 | 135 | 90 | 120 |
| மரக்கறி | 90 | 120 | - | - | 110 | 112 | 75 | 130 | 100 | 110 | - | - |
| முட்டை | 98 | 117 | 100 | 150 | 120 | 127 | 75 | 140 | - | - | 90 | 120 |

(ii) பின்வரும் வைத்தியசாலைகளிற்கான உணவின் விலை விகிதம் ஒப்பந்தகாரர்களால் முழு உணவு மற்றும் அரை உணவிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு விலை விகிதங்களைப் பகுப்பாய்வு செய்திருக்கவில்லை அதன் விளைவாக குறிப்பிடத்தக்க தெகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | குருநகர் | பண்டத்தரிப்பு | அளவெட்டி | புங்குடுதீவு |
|---|---|---|---|---|
| | முழு மற்றும் அரை உணவு வீதம் | முழு மற்றும் அரை உணவு வீதம் | முழு மற்றும் அரை உணவு வீதம் | முழு மற்றும் அரை உணவு வீதம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| உடன் மீன் | 120 | - | 140 | 130 |
| மாட்டிறைச்சி | - | - | 140 | 130 |
| கருவாடு | 120 | 125 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| மரக்கறி | 50 | - | - | 120 |
| முட்டை | 120 | 100 | - | 130 |

(iii) ஐந்து வகையான உணவுகளிற்காக இரண்டு ஒப்பந்தகாரர்கள் ஒரே விலை வீதத்தை சமர்ப்பித்திருந்தனர். இது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு வித்தியாசன உணவு வகைகளிற்காக ஒரே விலைகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மதிப்பாய்வு செய்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம்**

| விபரம் | முழு உணவு விலை வீதம் | அரை உணவு விலை வீதம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| உடன் மீன் உணவு | 135 | 50 |
| மாட்டிறைச்சி உணவு | 135 | 50 |
| கருவாடு | 135 | 50 |
| மரக்கறி | 135 | 50 |
| முட்டை | 135 | 50 |

(iv) போதியளவு உடன் மீன் இருக்கக் கூடிய நெடுந்தீவு பிரதேச வைத்திய சாலைக்கு ஒப்பந்தக்காரால் உடன்பட்டவாறு உடன் மீன் கருவாடு மற்றும் மாட்டிறைச்சிக்குப் பதிலாக திங்கள், செவ்வாய், புதன், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அடைத்த மின் வழங்கப்பட்டிருந்தது.

(v) உணவுகளின் அளவிற்கான விலை வீதம் மற்றும் உணவுகளின் வகைகளை கருத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட முறையற்ற தொழில்நுட்ப மதிப்பாய்வு காரணமாக சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளரால் மேலதிகக் கொடுப்பனவாக ஒப்பந்தக்காரர்களிற்கு பெருந்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.7.11 நன்னடத்தை மற்றும் சிறுவர் நலனோம்பு சேவை திணைக்களம்**

(அ) நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையின் கீழ் சிறுவர் பாதுகாப்பகங்கள் பராமரிக்கப்பட்டிருந்தன. சிறுவர் பாதுகாப்பகங்களிற்காக ரூபா 8,771,111 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சிறுவர் பாதுகாப்பகங்களில் முறையான நிதி ஒழுங்கு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நல்ல பிரசைகளாக சமூகத்திற்கு விடுவிக்கும் நோக்கில் பாதுகாப்பு மற்றும் தொழிற் பயிற்சி மற்றும் புனர்வாழ்வு என்பவற்றை அவர்களிற்கு வழங்கும் நோக்கத்திற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் நலனோம்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள சான்றழிக்கப்பட்ட பாடசாலைகளிற்கு நீதிமன்றங்களால் சிறுவர்கள் அனுப்பப்படுகின்றனர். எனினும், யாழ்ப்பாணத்திலுள்ள சான்றழிக்கப்பட்ட பாடசாலைகளில் ஆறு சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை இன்மை காரணமாக தப்பி ஓடியிருந்தனர்.

### 3.7.12 சமூக சேவைகள் திணைக்களம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் பொது உதவி மாதாந்த படி (பீஏஎம்ஏ) தொடர்பான நிதியத்தின் கட்டுப்பாட்டில் அவதானிக்கப்பட்ட நலிவுகள் கீழே தரப்படுகின்றன.

(i) தபால் நிலையங்களில் கொடுப்பனவுகளின் சான்றளிக்கப்பட்ட கூற்றுக்களில் உள்ள குறைபாடுகள் கவனிக்கப்படாமை

(ii) தபால் நிலையங்களில் கொடுப்பனவு விபரங்களை உறுதிப்படுத்த தவறியமை

(iii) ஆண்டு தோறும் விண்ணப்படிவங்கள் வழங்க தவறியமை மற்றும் நடவடிக்கை எடுக்காமை

(iv) உண்மையான பெறுநர் தவிர்ந்த வேறு நபர்களின் கையொப்பங்களை கவனியாமை.

(v) தபால் நிலையங்களிலிருந்து கொடுப்பனவு செய்யப்படாத நிதிகளை கூடிய விரைவில் அறவிடப்படாமை.

## 3.8 சொத்துக்களின் முகாமைத்துவம்.

### 3.8.1 பயன்பாடற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு மீளாய்வாண்டில் மாகாண சபையின் சொத்துக்கள் பயன்பாடின்றி அல்லது குறை பயன்பாட்டுடன் இருந்தன.

| சொத்துக்களின் தன்மை | விபரங்கள் |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள் | 85 அரச விடுதிகள் | பெறுமதிகள் தரப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | வாகனங்கள் | 04 பிக்கப் வாகனங்கள் | |
| | | 10 மோட்டார் சைக்கிள்கள் | |
| (இ) | இயந்திரங்கள் | 02 மின்னினற்பாக்கிகள் | |
| | | 53 கணணிகள் | |
| | | 226 கணனிப்பாகங்கள் | |
| (ஈ) | அலுவலக உபகரணங்கள் | 107 பிளாஸ்டிக் கதிரைகள் | |
| | | 126 தளபாடங்கள் | |

### 3.8.2 சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தகப் பெறுமதியில் கணிப்பிடப்பட்ட ஆனால் பௌதிக மெய்மையாய்வு கணிப்புச் சபை அறிக்கைகளால் ஆதாரப்படுத்தப்படாது ரூபா 332,822,052 பெறுமதியான சொத்துக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்களின் தன்மை | தொகை ரூபா |
|---|---|---|
| (i) | விவசாயப் பண்ணைகள் | 113,256,440 |
| (ii) | கால் நடைப் பண்ணைகளின் பராமரிப்பு | 54,197,968 |
| (iii) | புடைவைக் கைத்தொழில் | 14,551,480 |
| (iv) | இயந்திரப் பிரிவு | 150,816,164 |
| | | 332,822,052 |

### 3.9 இணங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்

(அ) மன்னார் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி 2003 திசெம்பர் 03 இல் விபத்தில் சிக்கியிருந்தது. வாகனத்தின் திருத்தல் கிரயம் ரூபா 695,700 ஆகும். பொறுப்பைத் தீர்மானிப்பதற்காக விபத்து தொடர்பான விசாரணைகள் நடாத்தப்படாதிருந்ததுடன் இந்த நட்டம் சம்பந்தமான அறிக்கை மாகாண நிதி விதி இல. 70 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்தை அடைந்திருந்ததுடன் ரூபா 1,368,564 ஆன திருத்தக் கிரயம் ஒரு தனியார் கராஜிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,036,344 தொகை மட்டுமே காப்புறுதிக் கம்பனியால் மீளளிக்கப்பட்டிருந்தது. ரூபா 332,220 ஆன மீதி மாகாண நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. மாகாண நிதி விதி இல 70 இன் பிரகாரம் பொறுப்பைத் திர்மானிப்பதற்கான விசாரனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண நிதி விதி 70(5) இன் பிரகாரம் 1999 தொடக்கம் 2011 வரை ஏற்பட்ட ரூபா 56,418,312 தொகையான நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கைகள் நான்கு மாகாண திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **ரூபா** |
|---|---:|
| கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 17,554,713 |
| நீர்பாசனத் திணைக்களம் | 22,794,842 |
| சுகாதார அமைச்சு | 13,142 |
| சுகாதார திணைக்களம் | 9,644,965 |
| கைத்தொழிற் திணைக்களம் | 6,410,650 |
| | ------------------ |
| | 56,418,312 |
| | ======== |

(ஈ) கணிப்புச் சபை அறிக்கைகளின் படி, மீளாய்வாண்டில் பொருந்தொகையான சொத்துக்கள் காணாமற் போனதாக அறிக்கையிடப்பட்டது. ஆனால், அதிகமான திணைக்களங்கள் தமது ஒதுக்கீட்டுக் கணக்குகளில் இந்த நட்டங்களை உள்ளடக்காததுடன் மாகாண நிதி விதி இல. 69 இன் பிரகாரம் இந்த நட்டங்களிற்கான ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் அந்தத் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 வாகனங்களின் பயன்பாடு**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) தரப்பட்ட தகவல்களின்படி, மாகாண சபையில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கை 603 ஆகும். அதே நேரம் பணிக்கமர்த்தப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை சுமார் 400 மட்டுமே. சாரதிகளின் பற்றாக்குறை காரணமாக

திணைக்களங்களால் வெளியே பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து சாரதிகள் பெறப்பட்டிருந்தனர்.

(ஆ) வடக்கு மாகாண சபையில் உள்ள 85 அம்புலன்ஸ் வண்டிகளில் ஏழு அம்புலன்ஸ் வண்டிகள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது பயன்பாடின்றி விடப்பட்டது.

(இ) மா.நி.வி. 432 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முறையாகப் பேணப்பட்டிருக்காததுடன் வெளிச் செல்வதற்கான உத்தியோக பூர்வ நோக்கங்கள் நாளாந்த ஓட்ட அட்டவனைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மா.நி.வி 433 இன் பிரகாரம், திணைக்களங்கள் தமது அலுவலக வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவனைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களை உரிய திகதிகளில் கணக்காய்விற்கு அனுப்பியிருக்கவில்லை.

(உ) மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாணர்களால் ஒன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகள் வீச்செல்லையான காலமாக அதிகமான வாகனங்கள் கராஜ்சுக்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டுகளில் நான்கு அம்புலன்ஸ் வண்டிகளின் நட்டம் தொடர்பான திணைக்கள நடவடிக்கைகள் 2012 திசெம்பர் வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 கொள்வனவுகளிலுள்ள குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் பிரிவு 4.2 இன் பிரகாரம் பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல திணைக்களங்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கொள்வனவுகள் மீதான செலவினத்தை கணக்காய்வில் பரீட்சிக்கமுடியாதிருந்தது.

(iii) கொள்வனவு வழிகாட்டிகளின் 2.5 ஆம் பிரிவின் படி கொள்வனவுக் குழுவில் மூன்று உறுப்பினர்களிலிருக்க வேண்டும். ஆனால் கொடுப்பனவு 3 உறுப்பினர்களிற்கும் அதிகமானோருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொள்வனவு வழிகாட்டிகளின் 2.9.1 ஆம் பிரிவின் படி கொள்வனவுக் குழுவின் கூட்டங்கள் அலுவலக நேரங்களிற்கு வெளியே நடாத்தப்பட வேண்டும். எனினும், கொள்வனவுக் குழுவின் சகல கூட்டங்களும் அலுவலக நேரத்திலேயே நடைபெற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iv) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 164.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிற்கு அவற்றின் நிதி மற்றும் பௌதீக இயலளவை மதிப்பாய்வு செய்யாது நிருமாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

**(v) ரூபா 9,100,000 இற்கு 100 மடிக் கணணிகளின் கொள்வனவு**

உயர்தரப் பரீட்சையை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு விநியோகிப்பதற்காக ரூபா 91,000 என்ற வீதத்தில் 100 மடிக் கணனிகளின் கொள்வனவிற்காக மாகாணத் திறைசேரியால் ரூபா 9,100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஆ) கட்டளையிடப்பட்ட மற்றும் கிடைத்த விடயங்களின் விபரங்கள் விநியோகியப்பட்டியல்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் என்பன கணக்காய்வுப் பரிசோதனைக்கு தரப்பட்டிருக்கவில்லை.

(இ) 100 மடிக் கணனிகளைக் கொள்வனவு கொள்வனவு செய்வதற்கான பாதீட்டு ஏற்பாடு கிடைக்கத்தக்கதாக இருக்கவில்லை.

(ஈ) மாகாணத் திறைசேரி தலைப்பு 421 இன் 2302 ஆம் செலவின விடயத்தினூடாக இந்த விடயங்களைக் கொள்வனவு செய்வதற்கு பாதீட்டில் பணம் ஒதுக்கப்படாதிருந்த போதிலும் செலவினம் தலைப்பு 421 மாகாணத் திறைசேரிக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(vi) ரூபா 6,145,688 ஆக ஒரு தனியார் நிறுவனத்திற்கு காற்று குளிரூட்டிகளை நிறுவுதல் (வீரசிங்கம் மண்டபம்)**

கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.8.3 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் நுட்ப மதிப்பாய்வு அறிக்கை இல்லாமல் யாழ்ப்பாண செயலகத்தால் பதினேழு காற்று குளிரூட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பின்னர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் வாயுக் குளிரூட்டிகளின் கொள்வனவிற்காக மேற்கொண்ட கொடுப்பனவுகள் மாகாணத் திறைசேரியால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாணத்திறைசேரியின் அதிகார வரம்பிற்கு வராத ஒரு தனியார் நிறுவனத்திற்காகக் ரூபா 6,145,688 பெறுமதியான காற்றுக் குளிரூட்டிகளின் கொள்வனவு மற்றும் நிறுவுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) செலவினத்திற்கான பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண நிதிகளிலிருந்து உயர் இயலளவில் 17 எண்ணிக்கையான காற்றுக் குளிரூட்டிகளின் கொள்வனவிற்கான நோக்கங்கள் கணக்காய்வு பரிசோதனைக்கு தரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனை நேரத்தில் தனியார் நிறுவனத்தில் (வீரசிங்கம் மண்டபம்) பொருத்தப்பட்ட பதினேழு காற்றுக் குளிரூட்டிகள் காணக்கூடியதாக இருக்கவில்லை.

**(vii) ரூபா 8,575,000 இற்காக 05 உழவு இயந்திர ரிப்பர் இழுவைப் பெட்டிகள் மற்றும் 20 பௌசர்களின் கொள்வனவு.**

பிரதேச சபைகளினூடாக மீள் குடியேற்ற நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக மேற்படி விடயங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2011 யூலை 18 இல் ரூபா 8,575,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினத்தை செய்வதற்கு பாதீட்டு ஏற்பாடுகளெதுவும் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இந்த நடவடிக்கைகள் மீள்குடியேற்ற அமைச்சிற்கு தொடர்புபட்டதாக இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களிற்கு மாகாண திறைசேரி செலவு செய்திருந்தது.

(இ) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.14.1 ஆம் பிரிவின்படி குறைந்தது ஐந்து கூறுவிலைகள் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இரண்டு கூறு விலைகளின் அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களின் விபரங்கள் மற்றும் கிடைத்த விடயங்களிற்கான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

**(viii) ஒரு புதிய டயோட்டா காரின் கொள்வனவு - ரூபா 9,950,000**

2011 யூன் 28 இல் ஒரு புதிய ரயோட்டா காரைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,950,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த கார் கௌரவ ஆளுநரின் அலுவலகப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், செலவினம் தலைப்பு 400 – ஆளநரின் செயலகத்திற்கு பதிலாக தலைப்பு 421 மாகாணத் திறைசேரியின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டுப் பாதீட்டில், பாதீட்டு ஏற்பாடெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு கேள்விகளின் அடிப்படையில் மாத்திரமே கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஆளுநர் செயலகத்தில் ஏற்கனவே இருந்த 03 கார்கள், 05 ஜீப் வண்டிகள் மற்றும் ஒருவன் என்பன உட்பட 14 எண்ணிக்கையான வாகனங்களிற்கு மேலதிகமாக தகுந்த காரணங்களின்றி மீளாய்வாண்டில் ஒரு புதிய கார் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2003 யூலை 24 ஆம் திகதிய 112 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்று நிரூபத்தின் பிரகாரம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான பொதுத் திறைசேரி அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**(ix) 700 பைசிக்கிள்களின் கொள்வனவு - ரூபா 8,859,500**

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களிற்கிடையில் விநியோகிப்பதற்காக 700 பைசிக்கிள்களின் கொள்வனவுக்காக மாகாணத் திறைசேரியால் ரூபா 8,859,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாணத் திறைசேரி ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடின்றி இந்த பைசிக்கிள்களைக் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக 5 கூறுவிலைகளுக்குப் பதிலாக மூன்று விலைகளின் அடிப்படையில் கொள்வனவு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.

(இ) பைசிக்கிளின் விற்பனை வியாபாரியல்லாத வழங்குனருக்கு கொடுப்பளவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மூல விலைப்பட்டியல் பெறாமல் 200 பைசிக்களிற்காக ரூபா 2,307,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 700 பைசிக்கிள்களில் 479 பைசிக்கிள்கள் ஆளுநர் பிரதேச ஆணையாளர், பாராளமன்ற உறுப்பினர், மற்றும் ஏனையோர்களால் விநியோகிக்கப்பட்டது. எனினும், மீதி 221 பைசிக்கிள்களின் விநியோக விபரங்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருகவில்லை.

**(x) ரூபா 32,200,000 ஆக 10 பஸ் வண்டிகளின் கொள்வனவு**

மீளாய்வாண்டில் 10 பஸ் வண்டிகளின் கொள்வனவிற்காக ரூபா 32,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த பத்து பஸ்களும் மாகாண திறைசேரியினால் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு விநியோகிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடின்றி மாகாணத் திறைசேரி தலைப்பு இல 421 இன் கீழ் இந்தச் செலவினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் (எஸ்எல்ரீபீ) உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு இந்த பஸ் வண்டிகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பஸ் வண்டிகளின் உரித்துடைமை ஒரு ஆண்டு காலம் கடந்தும் கூட இது வரை வடக்கு மாகாண சபையிடமே உள்ளது.

(இ) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்திற்குப் பதிலாக இரண்டு கூறு விலைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இந்த பஸ் வண்டிகளின் கொள்வனவிற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) பத்து பஸ் வண்டிகளின் கொள்வனவிற்காக 2003 யூலை 24 ஆம் திகதிய 112 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(xi) வீடுகளின் நிருமானத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் - ரூபா 59,400,000**

நெடுந்தீவு மற்றும் பளைப் பிரதேசங்களில் வீடுகளை நிருமாணிப்பதற்காக மீளாய்வாண்டில் பலாலி பாதுகாப்பு படைகள் தலைமை அலுவலகத்திற்கு ரூபா 59,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பின் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்ப:டுகின்றன.

(அ) மாகாணத் திறைசேரியின் ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு இல்லாத போதிலும் இந்தச் செலவினம் மா.நி.வி.இல 47 இற்கு முரணாக புதிதாக உருவாக்கப்பட்ட செலவின விடயம் 3006 மாகாண திறைசேரி தலைப்பு 421 இல் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிருமாணிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டின் மதிப்பீடு மற்றும் உண்மையான செலவினம் நிருமாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை,

நிருமாணிக்கப்பட்ட வீடுகளின் அமைவிடம், பூர்த்தியாக்கல் அறிக்கைகள், பயனாளிகளின் பட்டியல்கள் போன்ற விபரங்கள் கணக்காய்வு பரிசோதனைக்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(இ) அந்த வீடுகளின் நிருமானம் தொடர்பான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மா.நி.வி. 107 இன் பிரகாரம் சான்றுபடுத்தும் அலுவலரால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(xii) கல் வனைஷ்ட இரும்புக் கூரைகளின் கொள்வனவு ரூபா – 18,400,800**

மீளாய்வாண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பாவனைக்கான கல்வனைஸ்ட் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவிற்காக மாகாணத் திறைசேரியால் ரூபா 18,400,800 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பந்தப்பட்ட மூலங்களிலிருந்தான தேவைப்பட்டியல்கள், பாதிக்கப்பட்ட மக்களின் பட்டியல், பயனாளிகளின் பட்டியல், பெறுநரிடமிருந்தான பற்றுச்சீட்டுக்கள், கூரைத் தகடுகளின் பயன்பாடு போன்ற விபரங்கள் கணக்காய்வுப் பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வழங்கப்பட்ட அயர்ன் கூரைத் தகடுகளின் தரம் மிக குறைந்த தரமுடையதும் ஒரு முறைக்கு மேல் பயன்படுத்த முடியாததும் நீடித்த பாவனை அற்றவை என்றும் பெற்றுக்கொண்டவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) கொழும்பிலுள்ள அயர்ன் கூரைத் தகடுகள் வியாபாரியல்லா வழங்குனரிடமிருந்தது. கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழங்குனர் பிளாஸ்ரிக் விடயங்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் வியாபாரியாவார்.

(ஈ) மாகாண சபையின் அலுவலகர்களிற்குப் பதிலாக வழங்குனரால் தயாரிக்கப்பட்ட பொருள் பெற்றுக் கொண்ட குறிப்புக்களின் (ஜீ ஆர் என்) சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட 24,300 கூரைத் தகடுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டவர்களிடமிருந்தான பற்றுச் சீட்டுக்கள் 12,350 கூரைத் தகடுகளிற்காக மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டன.

(ஊ) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.4 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவுக் குழுக் கூட்டத்தில் ஒரு உறுப்பினர் மட்டுமே பங்கு பற்றி கொள்வனவு ஆவணங்களில் கையொப்பமிட்டிருந்தனர்.

(எ) வழங்குனரால் தேவைப்பாடு சமர்ப்பிக்கப்படாது ரூபா 406,200 தொகையான ஏற்றியிறக்கற் கட்டணங்கள் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஏற்றியிறக்கற் கட்டணக் கொடுப்பனவிற்கான கொள்வனவுக் குழு அல்லது உரிய அதிகாரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், முதலாவது தொகுதியான 5,000 கூரைத் தகடுகள் ஏற்றியிறக்கற் கட்டணமின்றி விடயங்களை வழங்க வழங்குனர் இணங்கியிருந்தமையால் ஏற்றியிறக்கற் கட்டணங்கள் இன்றி வழங்கப்பட்டன என்று குறிக்கப்பட்டது. ஆனால் பின்னரான வழங்கல்கள் வழங்குனரால் வேண்டப்படாத போதிலும் ஏற்றியிறக்கற் கட்டணங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கொள்வனவுக் குழு ஏற்றியிறக்கற் கட்டணங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வழங்குனர் கேள்வி ஆவணங்களில் தகடுகளின் தடிப்பு அளவை குறிப்பிட்டிருக்கவில்லை.

(ஐ) கேள்வி ஆவணங்களில் அலுவலக முத்திரை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கணக்காய்விற்குத் தரப்பட்ட சான்றுகளின் படி, இந்தக் கூரைத் தகடுகள் இலங்கை கல்வனைஸ்ட் இன்டஸ்ரியிலிருந்து மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டு உயர்ந்த விலையில் வழங்குனரால் மாகாண சபைக்கு விற்கப்பட்டிருந்தது.

**(xiii) மீளக் குடியேற்றப்பட்ட குடும்பங்களிற்காக 70 எண்ணிக்கையானது நீர்த்தாங்கிகளின் (1000 லீற்றர்) கொள்வனவு - ரூபா 894,000**

---

மீளாய்வாண்டில் 70 நீர்த்தாங்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 894,000 ஆன தொகை செலுத்தப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளாது மாகாணத் திறைசேரியின் கீழ் இந்த செலவினம் தாக்கல் செய்யப்பட்டடது.

(ஆ) கரைச்சி பிரதேச சபைக்கு விநியோகிப்பதற்காக 50 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும், இந்த நீர்த்தாங்கிகள் அந்தப் பிரதேச சபைக்கு 2012 திசெம்பர் 31 வரை விநியோகிக்கப்பட்டிருக்காததுடன் களஞ்சியத்தில் பயன்பாடின்றி இருக்கவிடப்பட்டது.

**(xiv) 33 எண்ணிக்கையான 125 சீசீ பசாஜ் மோட்டார் சைக்கிள்களின் கொள்வனவு - ரூபா 4,173,181**

---

மீளாய்வாண்டில் 33 எண்ணிக்கையான 125 சீசீபசாஜ் மோட்டார் சைக்கிள்களின் கொள்வனவிற்காக ரூபா 4,173,181 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்படாது மாகாணத் திறைசேரி தலைப்பு இல 421 இன் கீழ் இந்தச் செலவினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து கூறுவிலைகளிற்குப் பதிலாக மூன்று கூறு விலைகளின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பொதுத் திறைசேரி மற்றும் நிதி ஆணைக்குழு என்பவற்றின் அங்கீகாரம் அலுவலக உத்தியோகத்தரின் பாவனைக்காக 33 மோட்டார் சைக்கிள்களின் கொள்வனவிற்குப் பெறப்பட்டிருக்கவில்லை.

**(xv) யாழ்ப்பாண மாவட்டத்திற்காக 8’X6” அளவில் 10 விளம்பர பலகைகளின் கொள்வனவு - ரூபா 865,000**

---

யாழ்ப்பாண மாவட்டத்திற்காக 2011 திசெம்பர் 16 இல் 10 எண்ணிக்கையான 8’ X 6’ அளவு கொண்ட விளம்பர பலகைகளிற்காக ரூபா 865,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்தச் செலவினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குப் பதிலாக தலைப்பு இல 430 மாகாண விவசாய அமைச்சின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து கூறு விலைகளிற்குப் பதிலாக 3 கூறு விலைகளின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் 2.8.3 ஆம் பிரிவிற்கு முரணாக தொழில் நுட்ப பதிப்பாய்வுக் குழுவின் சிபார்சில்லாமல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) யாழ்ப்பாணத்தில் ஒரு விளம்பரப் பலகையின் கிரயம் அண்ணளவாக ரூபா 26,000 ஆகும். ஆனால் விலை கோரல்கள் யாழ்ப்பாணத்தில் பெறப்படவில்லை. எனினும், கோகந்தறவிலுள்ள ஒரு தனியார் கம்பனியினால் ஒரு பலகை ரூபா 86,500 என்ற வீதத்தில் பலகைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனி வடக்கு மாகாண சபையின் ஒரு பதிவு செய்யப்பட்ட வழங்குனர் கம்பனியல்ல. இதன் விளைவாக 10 எண்ணிக்கையான பலகைகளிற்காக ரூபா 605,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிலும் கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது இந்த வழங்குனரிடமிருந்து ஒரு பலகை ரூபா 86,500 கிரயத்தில் 57 விளம்பரப் பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதே நேரம் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மாகாண விவசாய அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இருக்கவில்லை.

(xvi) **உப பாகங்களுடன் 200 நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு ரூபா – 6,580,000**

மீளாய்வாண்டில் 200 எண்ணிக்கையான சோலெக்ஸ் நீரிறைக்கும் இயந்திரங்கள் உப பாகங்களுடன் கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,580,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்படாது தலைப்பு இல 430.3.2. 2306(32) விவசாய அமைச்சின் கீழ் இந்தச் செலவினம் தாக்கல் செய்யப்பட்டது.

(ஆ) பயனாளிகளின் பட்டியல் கணக்காய்விற்காகத் தரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 705,000 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) வழங்குனருக்கு வற் பதிவிலக்கமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

**(xvii) உப பாகங்களுடன் 05 ரொப் லான்ட் கெவி டியூரி டீசல் நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு - ரூபா 4,755,000**

மீளாய்வாண்டில் உப பாகங்களுடன் 05 எண்ணிக்கையான ரொப் லான்ட் கெவி டியூரி டீசல் நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவிற்காக ரூபா 4,755,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடின்றி இந்தச் செலவினம் தலைப்பு இல. 431 – 44 – 4 – 2303 விவசாயத் திணைக்களத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

(ஆ) ஐந்து கூறுவிலைகளிற்குப் பதிலாக இரண்டு கூறுவிலைகளின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையினால் கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பயனாளிகளின் பட்டியல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 509,465 தொகையான பெறுமதிசேர் வரி (வற்) வழங்குனருக்கு வற் பதவிலக்கமல்லாது செலுத்தப்பட்டிருந்தது.

**(xviii) 10 நெல் இணைப்பு அறுவடை இயந்திரங்களின் கொள்வனவு (வகை 4 எல் சற் - 2 – 0) - ரூபா 15,300,000**

மீளாய்வாண்டில் 10 எண்ணிக்கையான நெல் இணைப்பு அறுவடை இயந்திரங்களின் கொள்வனவிற்காக ரூபா 15,300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளாது இந்தச் செலவினம் தலைப்பு இல 431-44-4-2304 விவசாயத் திணைக்களத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவுத் தீர்மானம், பொருள் பெற்றுக் கொடை குறிப்புக்கள் மற்றும் பயனாளிகளின் பட்டியல் போன்றவாறான ஆதார ஆவணங்கள் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(xix) 100 கேவீஏ மின் பிறப்பாக்கிகளின் கொள்வனவு - ரூபா 2,647,128**

யாழ்ப்பாணத்திலுள்ள சுற்றுலா விடுதி மற்றும் டோமிற்றரி என்பவற்றிக்கான 100 கேவீஏ மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் கொள்வனவிற்காக ரூபா 2,647,128 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான அதிகாரமின்றி மாகாணக் கட்டிடங்கள் திணைக்களத்தின் வைப்புக் கணக்கின் கீழ் ரூபா 2,373,624 ஆன செலவினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) உயர் இயலளவு (100 கேவீஏ) மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவிற்கான நியாயத் தன்மையுடைய சம்பந்தப்பட்ட ஆவணங்களின்மையால் கணக்காய்வில் அதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 3.12 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

### (i) “நேக்கோர்ட்” செயற்திட்டம் தொடர்பான ரூபா 2,482,181 ஆன மத்தியஸ்த கட்டணங்களின் கொடுப்பனவு

ரூபா 2,482,181 தொகையான செலவினம் ‘‘நெக்கோர்ட்’’ செயற்திட்டம் தொடர்பானதாக இருந்த போதிலும், வவுனியா பொது வைத்தியசாலையில்

நான்குமாடி வெளி நோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை கட்டிடத் தொகுதி என்பனவற்றின் நிருமாணத்திலான மத்தியஸ்தக் கட்டணங்கள் நெக்கோட் செயற்திட்ட நிதிக்குப் பதிலாக வடக்கு மாகாண சபை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ii) பழைய பூங்கா அபிவிருத்தி செலவினம் - ரூபா 10,857,486**

யாழ்ப்பாணம், பழைய பூங்காவின் அபிவிருத்திக்காக ரூபா 10,857,486 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்படாது தலைப்பு இல. 461 – 15- 4 – 2201 மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தின் கீழ் இந்தச் செலவின தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இந்த நடவடிக்கைகள் மற்றும் காணியின் உரித்துடைமை என்பன யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துடன் தொடர்பானதாக இருந்த போதிலும், ரூபா 10.8 மில்லியன் கிரயத்திலான வேலைகள் மாகாணக் கட்டிடங்கள் திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கபட்டதுடன் செலவினம் மாகாண நிதிகளிலிருந்தே செய்யப்பட்டது.

(இ) இது தொடர்பில், கட்டிடங்கள் திணைக்களத்தால் ரூபா 370,000 தொகையான முகாமைத்துவக் கட்டணம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(iii) போதிய அதிகாரத்துடன் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்**

**(அ) பாடநெறிக் கட்டணக் கொடுப்பனவு ரூபா 410,200**

ஏழு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் 04 சமூக சேவை உத்தியோகத்தர்கள் என்போரிற்கு ரூபா 750 ஆன நூலகக் கட்டணம் உட்பட முதுமானி பாடநெறிக் கட்டண மீளளிப்பாக முறையான அதிகாரமின்றி ரூபா 410,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடின்றி வடக்கு மாகாண சபையின் மாகாண திட்டமிடல் செயலகம் மற்றும் சமூக

சேவைகள் திணைக்களம் என்பவற்றின் கீழ் இந்தச் செலவினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களின் சேவைக் குறிப்புக்களின் படி முதுமாணி கற்கையைப் பூர்த்தி செய்யும் தேவைப்பாடு அத்தகைய பதவிகளின் சேவைக்குறிப்பின் படி, உறுதிப்படுத்தல்களிற்காகப் கட்டாயமாக்கப்படவில்லை.

**(iv) தற்காலிக கடை உரிமையாளர்களிற்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு - ரூபா 600,000**

---

மீளாய்வாண்டில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக ஆறு தற்காலிகக் கடை உரிமையாளர்களிற்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி செலவினம் ஆண்டு மதிப்பீடுகளில் பாதீட்டு ஏற்பாடு மேற் கொள்ளப்படாது தலைப்பு இல 471-60-4-1901 மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(v) மீளப் பணிக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்களின் மேலதிக கொடுப்பனவு - ரூபா 3,360,959**

---

ஒப்பந்த அடிப்படையில் மீளப் பணியமர்த்தப்பட்ட இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்கள் 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க அரச நிருவாக சுற்று நிரூபத்திற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக அவர்களிற்கு ரூபா 3,360,959 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(vi) **பிரதேச வைத்திய சாலையின் அலுவலகம் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (எம்ஓஎச்) அலுவலகம் என்பவற்றின் நிருமாணத்திற்காக மேலதிக பரப்பு காணியின் சுவீகரித்தல் - ரூபா 37.5 மில்லியன்**

2010 ஆகத்து 07 இல் பொது மகன் ஒருவரால் நன்கொடையளிக்கப்பட்டு திணைக்களத்திற்கு ஏற்கனவே சொந்தமாக உள்ள 5 ஏக்கர் காணி இருந்த போதிலும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தை நிருமாணிப்பதற்காக 15 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்காக மாகாண சுகாதார அமைச்சினால் 2011 திசெம்பர் 31 இல் ரூபா 37.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. சுவிகரிப்பு நேரத்தில் ஒரு ஏக்கரிற்கான சந்தை விலை ரூபா 200,000 மட்டுமேயாகும். அதன் விளைவாக ரூபா 7.5 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டது. மேலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்தான மதிப்பீடு கொடுப்பனவு செய்வதற்கு முன் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடம் ஒரு ஏக்கருக்கும் குறைவான பரப்பளவான காணியில் மட்டுமே நிருமாணிக்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

**(vii) நிதி மோசடி - ரூபா 2.887 மில்லியன்**

கொள்வனவுக் கிரயத்தில் 50% சலுகை பெறுமதியுடன் விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளருக்கு உணவு மற்றும் விவசாயத் தாபனத்தால் 570 எண்ணிக்கையான நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 570 நீரிறைக்கும் இயந்திரங்களில் 264 எண்ணிக்கையான நீரிறைக்கும் இயந்திரங்கள் மட்டுமே விவசாயிகளிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக 2011 ஆகத்து 15 தொடக்கம் 2011 செப்தெம்பர் 12 வரையான காலத்தில் விவசாயிகளிடமிருந்தான ரூபா 2.887 மில்லியன் சேகரிப்பு அரசாங்கத்தின் கணக்கிற்கு அனுப்பப்படாது மாகாண விவசாயப் பணிப்பாளரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட நிதிகள் மாகாண விவசாயப் பணிப்பாளரால் மோசடி செய்யப்பட்டிருந்தது.

(viii) **சுற்று நிரூப அறிவுறுத்தல்கள்**

நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2010 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிரூபம் என்பவற்றிக்கு முரணாக கணிப்புச் சபை உறுப்பினர்களிற்கு படிகளைக் குறிப்பிடும் சுற்று நிரூபத்தை மாகாண சபை வழங்கியிருந்தது.

## 3.13 நோக்கங்களின் எய்துகை

கீழே காட்டப்பட்டவாறு நிறுவனமய நோக்கங்கள் முற்றாக எய்தப்பட்டதோ அல்லது போதிய அளவில் எய்தப்பட்டோ இருக்கவில்லை.

**(அ) மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் மாகாண அரச சேவைக்கு தகுந்தவர்களை ஆட்சேர்ப்பதாகும். மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவரால் 41 ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்தத் திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை தகுந்த உத்தியோகததர்களை ஆட்சேர்ப்பதற்காக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 செயற்திட்டங்களின் அமுலாக்கல்

**(அ) வட மாகாணத்திற்கான உள்நாட்டு மட்டத்தில் போசாக்கு ஊக்குவிப்பு செயற்திட்டம்**

கணக்காய்விற்குத தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்களின்படி, இந்தக் காலப்பகுதிற்காகத் தரப்பட்ட ரூபா 300,000,000 தொகையான நிதிகளில் ரூபா 24,841,242 தொகை மாத்திரமே மீளாய்வாண்டில் மேற்படி செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) மாகாண வீதிச் செயற்திட்டம்**

(i) செயற்திட்ட உடன்படிக்கையின் படி 100 கி.மீ மொத்த நீளமான வீதி நிருமாணத்திற்கான ஏழு பொதிகள் ரூபா 2,660 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்ட அலுவலகம், 55 கி.மீ மொத்த நீளமான 4 எண்ணிக்கையான பொதிகளை மட்டுமே ரூபா 1,515.4 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் ஆரம்பித்திருந்ததுடன் நிதி உடன்படிக்கை செய்து 8 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் ஒப்பந்தக்காரருக்கு 45 கி.மீ நீளமான ஏனைய 03 ஒப்பந்த வேலைப் பொதிகளை வழங்கியிருக்கவில்லை. வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,697.2 மில்லியன் (வற் உட்பட) ஆக இருந்தமையாலும் போதிய நிதி இன்மையாலும் மீதியான 45 கி.மீ வேலையை முன்னெடுக்க முடியவில்லை என செயற்திட்டப் பணிப்பாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(iii) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் கட்டு நிதியாக ரூபா 558,130,986 தொகை கிடைத்திருந்த போதிலும் பதிவேடுகளின் படி, இந்தக் காலப்பகுதியில் செலவினமாக ரூபா 234,089,574 மட்டுமே

மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட (டொலர்) கணக்கின் ரூபா 346,653,804 தொகையான மீதி செயற்திட்ட நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்தப்படாது பயனின்றிவிடப்பட்டிருந்தது.

## 3.15 உள்ளூராட்சிச் சபைகளின் விவகாரங்கள் மீதான மேற்பார்வை

இலங்கையின் அரசியல் யாப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் எட்டாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை மாகாண சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வட மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் 05 உள்ளூராட்சி சபைகள் மாத்திரமே மீளாய்வாண்டிற்கான ஆண்டுக் கணக்குகளை 2012 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்தன. மேலும் வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் மீளாய்வாண்டிற்கான 08 ஆண்டுக் கணக்குகள் 2012 யூன் 30 இன் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூராட்சிச் சபைகளின் இறுதிக் கணக்குகளின் மீது தெரிவிக்கப்பட்ட முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயங்களின் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | கணக்குகள் மீது தெரிவிக்கப்பட்ட முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களின் எண்ணிக்கை | கணக்குகள் மீது தெரிவிக்கப்பட்ட முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 06 | 11 |
| முல்லைத்தீவு | - | 04 |
| கிளிநொச்சி | - | 03 |
| வவுனியா | - | 05 |
| மன்னார் | 02 | 03 |
| | 08 | 26 |

(இ) வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரோ அல்லது தலைமைச் செயலாளரோ அல்லது உள்ளூராட்சி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரோ உள்ளூராட்சி அதிகார சபைகளின் உள்ளகக் கணக்காய்விற்கான தாக்கமான மற்றும் அர்த்த புஷ்டியான முறைமையை அமுலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வீதிகள், மலசல கூடங்கள் மற்றும் குழாய்க்கிணறு வேலைகளிற்கான ஒப்பந்தங்கள், கொள்வனவு வழிகாட்டிகள் 2006 இன் பிரகாரம் முறையான கேள்வி நடைமுறைகள், கொள்வனவுக்குழு தீர்மானங்கள், போன்றன கடைப்பிடிக்காது கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் என்பவற்றிக்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும், கொள்வனவு வழிகாட்டிகள் மற்றும் கைநூலின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் சனசமூக நிலையங்களிற்கல்லாது உள்ளூராட்சித் துறையிலான அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்த சன சமூக அபிவிருத்திச் சங்கங்களிற்கு (பிரஜா சமர்வர்த்தன சமிதி) ஒப்பந்தங்கள் வழங்கப்படலாம்.

(உ) கணக்காய்விற்குச் சமர்ப்பபிக்கப்பட்ட தகவல்களின் படி, மாகாண சபையின் 5 மாவட்டங்களிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான நிலுவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டங்கள் | உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை | வருமான நிலுவைகள் ரூபா |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 14 | 280,605,191 |
| முல்லைத்தீவு | 03 | 13,569,969 |
| கிளிநொச்சி | 01 | 122,308 |
| வவுனியா | 05 | 55,543,101 |
| மன்னார் | 05 | 10,398,585 |
| | 28 | 360,239,154 |

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளால், ரூபா 360,239,154 தொகையான வருமான நிலுவைகளைச் சேகரிப்பதற்கு அந்தப்புஷ்டியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நீதிமன்ற குற்றப் பணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வை - ரூபா 221,638,007**

சட்ட ஏற்பாடுகளின்படி உள்ளூராட்சி சபைகளின் பிரதேசத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் மற்றும் மாகாண சபை அல்லது ஏனைய அதிகார சபைகளினால் வைத்திருக்கும் ஆதனத்தின் மாற்றம் தொடர்பான முத்திரைத் தீர்வை என்பன நேர காலத்துடன் வேண்டிக்கொள்ளப்படாமையால் உள்ளூராட்சிச் சபைகளிற்கு அனுப்பப்படாது அவர்களிடமே வைக்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்படாத நீதிமன்ற குற்றப்பணங்கள் மற்றும் முத்திரைத் தினங்களின் விபரங்கள் பின்வருமாறிருந்தன.

| மாவட்டங்கள் | முத்திரைத் தீர்வை நிலுவைகள் ரூபா | நீதிமன்ற குற்றப்பண நிலுவைகள் ரூபா |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 156,355,876 | 21,490,927 |
| முல்லைத்தீவு | - | 7,279,455 |
| கிளிநொச்சி | - | 10,248,787 |
| வவுனியா | 3,378,703 | 18,742,098 |
| மன்னார் | 18,350 | 4,123,811 |
| | 159,752,929 | 61,885,078 |

(எ) ரூபா 249,414,242 பெறுமதியான 26 உள்ளூராட்சி சபைகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதிப்பிரமாணங்கள் 102 மற்றும் 103 இன் பிரகாரம் அதிகாரம் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டில் தற்காலிக நாட் குறிப்புக்களினூடாக பதிவழிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டங்கள் | உள்ளூராட்சி சபை விபரங்கள் ரூபா | தொகை ரூபா |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 02 நகரசபைகள் | 9,584,906 |
| | 13 பிரதேச சபைகள் | 20,185,660 |

| | | | |
|---|---|---|---|
| மன்னார் | 01 | நகரசபை | 235,905 |
| | 04 | பிரதேச சபைகள் | 18,781,713 |
| கிளிநொச்சி | 03 | பிரதேச சபைகள் | 133,542,197 |
| முல்லைத்தீவு | 03 | பிரதேச சபைகள் | 69,083,861 |
| | | | ---------------------- |
| | | | 249,414,242 |
| | | | ========== |

(ஏ) உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

(i) குறிப்பாக சுனாமிக்குப் பின்னர் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து (என்ஜிஓ) நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்களாக கிடைத்த சொத்துக்கள் மற்றும் பதிவேட்டுப் பொருட்கள் முறையாக பொருட் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) குறிப்பாகச் சுனாமிக்குப் பின்னர் முறையான அதிகாரமின்றி பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் உள்ளூராட்சி சபைகளின் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மாகாண ஆணையாளரின் பரிசோதனை உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் அறிக்கைகள் மீது மாகாண மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அசாதாரண தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் உபபேரேடுகள் அல்லது பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(vi) அலுவலக வாகனங்களை பாவிப்பதற்குத் தகைமையற்ற உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் அலுவலக வாகனங்களைப் பாவித்திருந்தனர்.

(vii) உள்ளூராட்சிச் சபைகள் தமது தொழிலாளர் அணியைப் பயன்படுத்தி நிருமாண வேலைகளை நிறைவேற்றியிருந்தன எனினும், முறையான வேலைத்தாள்களெதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு அல்லது இருப்பு கட்டுப்பாடு பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, இருப்பு நிலைமையை ஆய்வு செய்து இருப்புப் குறைவுகள் / மேலதிகங்களை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(viii) உள்ளூராட்சிச் சபைகளின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உண்மையான பெறுமதி, நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ix) பல்வேறு தரப்பினர்களாலும் நன்கொடையளிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக உள்ளூராட்சி சபைகளின் சொத்துப் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(x) வருமான வீத வரிகளை 25 ஆண்டுகளிற்கு மேல் ஆதனங்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படத் தவறியமையால் அதிகரிக்கப்பட முடியவில்லை.

(xi) சபைகளிற்குச் சொந்தமான பல்வேறு காணிகள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் பஸ் தரிப்பிடங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடமிருந்து அறவீடுகளெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xii) யாழ்ப்பாண மாநகர சபையால், அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விஞ்சி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பாக அங்கீகரிக்கப்படாத ஆளணிக்காக ரூபா 7,605,420 தொகை சம்பளங்களாகவும் ரூபா 2,835,000 தொகை வாழ்க்கைச் செலவுப்படியாகவும் செலுத்தப்பட்டிருந்தன.

(xiii) உள்ளூராட்சிச் சேவைகளால் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய உதவு தொகைகள் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாநகர சபையால் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 109,000 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.

## 4. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மாகாண நிதி விதி 99 இன் பிரகாரம் மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் ஆளுநர் செயலகம் கணக்காய்விற்குட்படுத்தப்படவில்லை.

(ஆ) மாகாண நிதி விதி 101 இன் பிரகாரம் மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் தயாரிப்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட பல்வேறு விடயங்களில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல திணைக்களங்களில் 2000 யூன் 12 ஆம் திகதிய ஐஏஐ/2000/01 ஆம இலக்க திறைசேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்காததுடன் கூட்டங்களும் நடத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பதவியினரின் நியமனங்கள் மற்றும் சம்பளங்கள், சொத்துக்களின் கொள்வனவுகள், கணக்கீட்டு நடைமுறைகள், கணக்குப் பதிவேடுகளின் பேணுகை, சொத்துக்களின் பயன்பாடு முதலியவற்றில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளின் நோக்கில் செயற்பாட்டிலுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மாகாண சபையின் நிருவாகம் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சிக்கனம் மற்றும் பயனுறுதித்தன்மை என்பன போதியளவில் இருக்கவில்லை. அந்தப் பரப்புக்களில் விசேட கவனம் கோரப்படுகின்றது.